**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

**SC. No - 59/2022**

**Prosecution PW - 26**

| | | | |
|---|---|---|---|
| Name | மருத்துவர். பிரசாத் | Occupation | |
| Husband/Father Name | | Caste | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Date | 04-11-2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**(Accused A1 to A3 present.)**
முதல் விசாரணை -

நான் கும்பகோணம் காந்தியடிகள் சாலையில் உள்ள பிரசாத் ஸ்கேன் சென்டர் நடத்தி வருகிறேன். கடந்த 07.11.2018ம் தேதி கும்பகோணத்தில் உள்ள அன்னம்மாள் மருத்துவமனை மருத்துவர் லீமாரோஸ் என்பவர் பாதிக்கப்பட்ட பெண்ணை ஸ்கேன் செய்ய பரிந்துரை செய்திருந்தார். நான் மாலை 05.20 மணிக்கு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஸ்கேன் செய்தேன். என்னுடைய ஸ்கேன் பரிசோதனையில் Hematocolpos to rule out Vaginal abnormality. Liver, Pancreas, Spleen, Kidneys, bladder, Utreus and overies are found normal. No GB/Renal calculus. No Mass lesion or free fluid abdomen. Hematocolpos என்பது யோனி பையில் இரத்தம் சேர்ந்து இருப்பதாக நான் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஸ்கேன் அறிக்கை வழங்கினேன். அந்த ஸ்கேன் அறிக்கை அ.த.சா.ஆ.**-20.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை **1, 2** எதிரிகள் தரப்பில்

இல்லை

குறுக்கு விசாரணை **3**ம் எதிரி தரப்பில்

Hematocolpos உள்ள நபர்களுக்கு உடலுறவு கொள்ளும் போது கன்னித்திரை கிழியும் போது அதிக இரத்தப்போக்கு ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்ட Vaginal tear இசைவாக உடலுறவு கொள்ளும் போதும், வேகமாக இயங்கும் போது, நிலை மாறி உடலுறவில் ஈடுபடும் போதும் ஏற்பட வாய்ப்புள்ளது.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- **G.** சுந்தரராஜன்,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

**SC. No - 59/2022**

**Prosecution PW - 27**

| | | | |
|---|---|---|---|
| Name | மருத்துவர். சரவணன் | Occupation | |
| Husband/Father Name | | Caste | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Date | 04-11-2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**(Accused A1 to A3 present.)**

முதல் விசாரணை -

நான் தற்போது திருச்சிராபள்ளி கி.ஆ.பெ. விஸ்வநாதம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.08.2022ம் தேதி நான் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் இணை பேராசிரியராக பணியில் இருந்தபோது, திருச்சி குற்றபிரிவு புலனாய்வு துறை காவல் துணை கண்காணிப்பாளரிடம் இருந்து சில கேள்விகள் குறித்து நிபுணரின் பதில் வழங்குமாறு கோரியிருந்தார். அந்த வேண்டுகோளின் படி மொத்தம் 7 கேள்விகளுக்கு நான் பதில் வழங்கியிருந்தேன். நான் வழங்கிய 7 கேள்விக்கான பதில் தான் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ஆவணம் அ.தசா.ஆ-**21**. ( எதிரிகள் தரப்பில் அதசாஆ-21 ஆவணத்தை குறியிடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை **1, 2** எதிரிகள் தரப்பில்

நான் மருத்துவ ஆவணங்களை பார்வையிட்டு நிபுணத்துவ அறிக்கை வழங்கியதாக அதசாஆ-21ல் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு பெண்ணை மதுவோ அல்லது மயக்க மருந்தோ கொடுக்காமல் வன்புணர்ச்சி செய்தாலும் காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண்ணை முதன்முதலில் மருத்துவ பரிசோதனை செய்யும் மருத்துவரால் மட்டுமே காயங்கள் குறித்து குறிப்பிட முடியும் என்றால் சரிதான். சட்ட முரணாக ஏதாவது கருவியை வைத்து கருகலைப்பு செய்திருந்தால், அந்த கருவியால் 7செ.மீ வரையிலான காயம் பிறப்புறுப்பில் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை 3ம் எதிரி தரப்பில்

மயக்க மருந்து ஊசி வழியாகவும், சுவாசத்தின் வழியாகவும் நிபுணத்துவ பெற்ற மயக்கவியல் மருத்துவரால் மட்டுமே அளவு அறிந்து கொடுக்க முடியும் என்றால் சரிதான். ஊமத்தங்காய் போன்ற தாவர நச்சு பொருட்கள் சாதாரண மனிதர்களாலும் கொடுக்கப்படுகிறது. ஊமத்தங்காய் என்பது முழுமையான நச்சு பொருள் என்றால் சரிதான். ஊமத்தங்காயை மயக்கத்திற்கு பொதுவாக பயன்படுத்துவது இல்லை என்றால் தற்போது இரயில், பேருந்து போன்ற கொள்ளை சம்பவத்தில் ஈடுபடும் நபர்கள் குறைந்த அளவில் பயன்படுத்தி மயக்க நிலையை அடைய செய்கிறார்கள். நான் இதுவரை ஊமத்தங்காய் பயன்படுத்தப்பட்ட எந்த வழக்கையும் கையாண்டது இல்லை. ஊமத்தங்காயை பயன்டுத்துபவரும் சில நிபுணத்துவம் தெரிந்திருக்க வேண்டும், இல்லை என்றால் அது உயிரை பறிக்கும் விஷமாகிவிடும் என்றால் சரிதான். ஊமத்தங்காயை மயக்கத்திற்காக சிறிது அளவு பயன்படுத்தினால் அந்த மயக்கம் 6-8 மணிநேரம் வரை இருக்கும். அதற்கு மேல் இருக்க வாய்பில்லை. சுயநினைவிற்கு வந்த பிறகு, மீண்டும் மயக்கநிலைக்கு செல்ல இயலாது. மீண்டும் எடுத்தால் மட்டும் தான் மயக்கநிலைக்கு செல்ல வாய்ப்பு. இரத்த பரிசோதனை மேற்கொண்டால் மயக்க மருந்து எடுத்தது கண்டுபிடிக்க இயலும். இரத்த பரிசோதனை குறித்து புலன் விசாரணை அதிகாரி எந்த கேள்வியும் என்னிடம் கேட்கவில்லை. நான் முதலில் கொடுத்த மருத்துவரின் கருத்துரைக்கு மாற்றாக கொடுத்த கருத்துரைக்கு ஆதாரமாக நான் எந்த ஆவணங்களையும் முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரிதான். அதற்கு சிறப்பு காரணம் எதுவும் இல்லை. நான் வழங்கிய கேள்விக்கான பதில் பாதிக்கப்பட்ட பெண்ணை பரிசோதிக்காமலும், அதற்கான ஆவணங்களை பார்வையிடாமலும் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- G. சுந்தரராஜன்,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)